भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

नई दिल्ली, मंगलवार, 20, अकटोबर 1998/1920 सका

New Delhi, Tuesday 20th October 1998/1920 Saga

*புது தில்லி, 1998 அக்டோபர் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1920 சக*

---

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

New Delhi, the 20th October 1998

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டமியற்றுத் துறை)*

*புது தில்லி, 20 அக்டோபர் 1998*

The translation in Tamil of the Registration of Births and Deaths Act, 1969 (18 of 1969), The Medical Termination of Pregnancy Act, 1971 (34 of 1971), The Voluntary Surrender of Salaries (Exemption from Taxation) Act, 1961 (46 of 1961), The Excise (Malt Liquors) Act, 1890 (13 of 1890), The Government Buildings Act, 1899 (4 of 1899), The Indian Easements Act, 1882 (V of 1882), The Personal Injuries (Compensation Insurance) Act, 1963 (37 of 1963), The Provisional Collection of Taxes Act, 1931 (16 of 1931), The Marriages Validation Act, 1892 (2 of 1892), The River Boards Act, 1956 (49 of 1956), The Telegraph Wires (Unlawful Possession) Act, 1950 (74 of 1950), The Commissions of Inquiry Act, 1952 (60 of 1952), The Indian Statistical Institute Act, 1959 (57 of 1959), The Legal Tender (Inscribed Notes) Act, 1964 (28 of 1964), The Payment of Wages Act, 1936 (4 of 1936), The Citizenship Act, 1955 (57 of 1955), are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1969 (18/1969), கருவுற்றிருத்தலை மருத்துவ முறையில் கலைப்பதற்கான சட்டம், 1971 (34/1971), தம் விருப்பாக வரையூதியங்களை ஒப்புவித்துவிடுதல் (வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பு) சட்டம், 1961 (46/1961), (மாத்தேறல்கள்) ஆயச் சட்டம், 1890 (13/1890), அரசாங்கக் கட்டடங்கள் சட்டம், 1899 (4/1899), இந்திய வசதியுரிமைகள் சட்டம், 1882 (V/1882), உடலூறுகள் (சரியீட்டுக் காப்பீடு) சட்டம், 1963 (37/1963), தாற்காலிகமாக வரிகள் ஈட்டுதல் சட்டம், 1931 (16/1931), திருமணங்களைச் செல்லுந்தன்மையுடையனவாக்குதல் சட்டம், 1882 (2/1882), ஆற்றுவாரியங்கள் சட்டம், 1956 (49/1956), தந்திக் கம்பிகள் (சட்ட முரணான உடைமை) சட்டம், 1950 (79/1950), விசாரணை ஆணையங்கள் சட்டம், 1952 (60/1952), இந்தியப் புள்ளியியல் சட்டம், 1959 (57/1959), சட்டச் செலாவணி (பொறிக்கப்பட்ட பணத்தாள்கள்) சட்டம், 1964 (28/1964), கூலிகொடுத்தல் சட்டம், 1936 (4/1936), குடிமைச் சட்டம், 1955 (57/1955), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமையுடையான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமையுடையான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 74.00

# தந்திக் கம்பிகள் (சட்டமுரணான உடைமை) சட்டம், 1950

*(சட்ட எண் 74/1950)*

*[1950, டிசம்பர் 28]*

தந்திக் கம்பிகளின் உடைமையை ஒழுங்குறுத்துவதற்கும் அவற்றைச் சட்ட முரணாக உடைமையில் வைத்திருக்கும் குற்றச்செயலுக்கான தண்டனைக்கு வகைசெய்வதற்குமான சட்டம்.

நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், தந்திக் கம்பிகள் (சட்ட முரணான உடைமை) சட்டம், 1950 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) மாநிலம் எதிலும் இது, மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக அத்தகைய மாநிலத்திற்காகக் குறித்திடலாகும் தேதியன்று செல்லாற்றல் பெறும்; மற்றும், வெவ்வேறு மாநிலங்களுக்கு வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம்.

2. இந்தச் சட்டத்தில்,— பொருள் வரையறைகள்.

(அ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ஆ) "தந்திக்கம்பி" என்பது, மில்லி மீட்டரில்,

(i) 2.43க்குக் குறையாததும் 2.53க்கு அதிகமாக இல்லாததும், அல்லது

(ii) 2.77க்குக் குறையாததும் 2.87க்கு அதிகமாக இல்லாததும், அல்லது

(iii) 3.42க்குக் குறையாததும் 3.52க்கு அதிகமாக இல்லாததுமான விட்டத்தையுடைய செப்புக்கம்பி எதுவும் என்று பொருள்படும்.

3. தந்திக் கம்பிகளை உடைமையில் வைத்திருக்கிற நபர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திலிருந்து ஆறு மாதங்களுக்குள் வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும் வகுத்துரைக்கப்படலாகும் அதிகார அமைப்பிற்கும் தன் உடைமையில் உள்ள தந்திக் கம்பிகளின் அளவைக் குறிக்கிற எழுத்து வடிவிலான விளம்புகை ஒன்றைச் செய்தல் வேண்டும். தந்திக் கம்பிகளை உடைமையில் வைத்திருப்பதை விளம்புகை செய்வதற்கான கடமை.

4. பத்துப் பவுண்டு எடைக்கு மிகுதியாகத் தந்திக் கம்பிகளை உடைமையில் வைத்திருக்கின்ற நபர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திலிருந்து ஓர் ஆண்டுக்குள், பத்துப் பவுண்டிற்கும் மிகையாக உள்ள அளவு முழுவதையும், வார்ப்புக் கட்டிகளாக உருமாற்றி வைத்துக்கொள்ளுதல் வேண்டும்: தந்திக் கம்பிகளை உருமாற்றி வைத்துக் கொள்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கான கடமை.

**வரம்புரையாக:** வகுத்துரைக்கப்படலாகும் விலைக்கும், வகுத்துரைக்கப்படலாகும் அதிகாரஅமைப்பிற்கும் தனது உடைமையில் உள்ள தந்திக் கம்பிகள் முழுவதையும் அல்லது அதன் பகுதி எதையும் விற்பனை செய்வதற்கு அத்தகைய நபர் எவருக்கும் உரிமை உண்டு.

53/1953. 4 (அ). தந்திக் கம்பிகள் (சட்ட முரணான உடைமை) திருத்தச் சட்டம், 1953 இன் தொடக்கத்திற்குப் பின்பு, நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அதிகாரஅமைப்பின் அனுமதியுடன் அன்றி, எந்த அளவுள்ள தந்திக் கம்பிகளையும் விற்பனை செய்தல் அல்லது விலைக்கு வாங்குதல் ஆகாது. தந்திக் கம்பிகளை விற்பனை செய்வதற்கும் விலைக்கு வாங்குவதற்கும் தடை.

*தந்திக் கம்பிகளைச் சட்டமுரணான உடைமையில் வைத்திருப்பதற்கான தண்டனை.*

5. எந்த அளவுள்ள தந்திக் கம்பிகளையும் உடைமையில் வைத்திருப்பதாகக் காணப்படுகிற அல்லது மெய்ப்பிக்கப்படுகிற எவராயினும் அந்த தந்திக் கம்பிகள் சட்டப்படியாகத் தமது உடைமையில் வந்தன என்று அவர் மெய்ப்பித்தாலன்றி, அவர்,—

(அ) முதற்குற்றத்திற்காக, ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவுக்குச் சிறைத்தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்; மற்றும் நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் பதிவு செய்யப்பட வேண்டிய தனியுறுவான மற்றும் போதுமான காரணங்கள் இல்லாதிருக்கையில், அத்தகைய சிறைத்தண்டனைக் கால அளவானது ஓர் ஆண்டிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும், மற்றும் அத்தகைய அபராதம் ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்;

(ஆ) இரண்டாவது அல்லது பிந்தைய குற்றச் செயல் ஒன்றுக்காக, ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவுக்குச் சிறைத்தண்டனையும் அதோடு கூட அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்; மற்றும் நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் பதிவு செய்யப்படவேண்டிய தனியுறுவான மற்றும் போதுமான காரணங்கள் இல்லாதிருக்கையில், அத்தகைய சிறைத்தண்டனைக் காலஅளவானது இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய அபராதம் இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** பிரிவு 3 இன்படி நபர் ஒருவர், தந்திக் கம்பிகளின் அளவு எதுவும் தொடர்பான விளம்புகை ஒன்றைச் செய்திருக்குமிடத்து, அவ்வாறு விளம்புகை செய்யப்பட்ட அளவு பொறுத்து, அது சட்டப்படியாகத் தனது 45
உடைமையில் வந்தது என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு அத்தகைய நபரைச் சார்ந்திருத்தல் ஆகாது.

*பிரிவு 3 இன் அல்லது பிரிவு 4 இன் அல்லது பிரிவு 4 ஆஇன் வகையங்களை மீறுவதற்கான தண்டனை.*

6. பிரிவு 3 இனால் வேண்டுறுத்தப்படுகிற விளம்புகை ஒன்றைச் செய்யத் தவறுகிற, அல்லது பிரிவு 4 இன் அல்லது பிரிவு 4அ இன் வகையங்களை மீறுகிற நபர் எவரும் ஆறுமாதங்கள் வரை நீடிக்கலாகும் காலஅளவு ஒன்றிற்குச் சிறைத் தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

*சோதனையிடுவதற்கும் கைப்பற்றுவதற்குமான அதிகாரங்கள்.*

6அ. (1) உதவி ஆய்வாளர் ஒருவரின் படிநிலைக்குக் குறையாத காவல் துறை அலுவலர் ஒருவர்,—

(i) தந்திக் கம்பி எதையும்,

(ii) அத்தகைய தந்திக் கம்பியைக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனம் அல்லது விலங்கு எதையும், அத்தகைய தந்திக்கம்பி பொறுத்து இந்தச் சட்டத்தின் வகையம் எதுவும் மீறப்பட்டு வருகிறது அல்லது மீறப்பட்டுக் கொண்டிருக்கிறது அல்லது மீறப்படவிருக்கிறது என்று தகவான ஐயம் கொள்வராயின்,

கைப்பற்றலாம் அல்லது இடம் எதையும் சோதனையிட்டு அவற்றைக் கைப்பற்றலாம்.

(2) சோதனைகள் மற்றும் கைப்பற்றுகைகள் தொடர்பான குற்றவியல் 2/1974
நெறிமுறைத் தொகுப்புச்சட்டம், 1973 இன் வகையங்கள், இந்தப் பிரிவின்படி செய்யப்படுகிற சோதனைகள் மற்றும் கைப்பற்றுதல்களுக்கு கூடிய அளவிற்குப் பொருந்தும்.

*தந்திக் கம்பிகள், வாகனங்கள் முதலியவற்றைப் பறிமுதல் செய்தல்.*

6 ஆ இந்தச் சட்டத்தின் வகையங்கள் எவற்றையும் மீறியதற்காக நபர் எவருக்கும் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டிருக்குமிடத்து, எந்தத் தந்திக்கம்பிகள் தொடர்பாக அந்த மீறுகை செய்யப்பட்டிருக்கிறதோ, அந்தத் தந்திக் கம்பிகளும் அத்தகையத் தந்திக் கம்பிகளைக் கொண்டு செல்வதற்காகப்

பயன்படுத்தப்பட்ட ஏதேனும் வாகனம் அல்லது விலங்கும், அந்த வாகனம் அல்லது விலங்கின் உரிமையாளர் தமக்கும் தமது முகவர் எவரேனுமிருப்பின் அவருக்கும் அந்த வாகனம் அல்லது விலங்கினைத் தம் பொறுப்பில் கொண்டுள்ள நபருக்கும் தெரியாமலேயே அல்லது அவரின் மறைமுக ஆதரவு இல்லாமலேயே அவ்வாறு பயன்படுத்தப்பட்டது எனவும் அவர்களில் ஒவ்வொருவரும் அத்தகைய பயன்படுத்துகைக்கு எதிராகத் தகுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்திருந்தார்கள் எனவும் மெய்ப்பித்தாலன்றி, நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்படுவதற்கு உள்ளாதல் வேண்டும்:

**வரம்புரையாக:** வாடகைக்காக, சரக்குகள் அல்லது பயணிகளைக் கொண்டு செல்வதற்கு அத்தகைய வாகனம் அல்லது விலங்கு எதுவும் பயன்படுத்தப்படுகிறவிடத்து, அந்த வாகனம் அல்லது விலங்கைப் பறிமுதல் செய்வதற்குப் பதிலாக, அதைக் கைப்பற்றிய தேதியன்று அந்த வாகனம் அல்லது விலங்கின் சந்தை விலை அல்லது எந்தத் தந்திக் கம்பிகளைப் பொறுத்து மீறுதல் செய்யப்பட்டிருக்கிறதோ அந்தத் தந்திக் கம்பிகளின் மதிப்பு இவற்றில் எது குறைவானதோ அதற்கு மேற்படாத அபராதத்தைச் செலுத்துவதற்கு விருப்பத்தேர்வு ஒன்று அந்த வாகனம் அல்லது விலங்கின் உரிமையாளருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** அவ்வாறு கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட தந்திக் கம்பிகள் எவையும், மைய அரசாங்கத்தால் குறித்துரைக்கப்படலாகும் அதிகாரஅமைப்பிற்கு நீதிமன்றத்தினால் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

*குற்றச் செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.*

7. (1) இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதையும், அத்தகைய குற்றச்செயலாக அமைகின்ற பொருண்மைகள் பற்றி இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 2 இன் பொருளின்படி அரசுப் பணியாளராக இருக்கிற நபர் ஒருவரால் செய்யப்பட்ட எழுத்து வடிவிலான அறிக்கையின் பேரிலன்றி, நீதிமன்றம் எதுவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது.

*1860*

(2) மாகாணத் தலைநகர் குற்றவியல் நடுவர் அல்லது முதல் வகுப்புக் குற்றவியல் நடுவரின் நீதிமன்றத்திற்குக் கீழமைந்துள்ள நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதையும் விசாரணை செய்தல் ஆகாது.

*விதிகள் வகுப்பதற்கு அதிகாரம்.*

8. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளை வகுக்கலாம்.

(2) அத்தகைய விதிகள், குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப் பாங்கிற்குக் குந்தகமின்றியும், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:—

(அ) பிரிவு 3 இன்படியான விளம்புகைகள், எந்தப் படிவத்திலும் எந்த அதிகாரஅமைப்பிற்கும் செய்யப்படலாகுமோ அந்தப் படிவமும், அதிகாரஅமைப்பும்;

(ஆ) பிரிவு 4 இன்படி எந்த அதிகாரஅமைப்புகளிடம் மற்றும் என்ன விலைகளில் தந்திக் கம்பிகள் விற்கப்படலாகுமோ அந்த அதிகாரஅமைப்புகள் மற்றும் அந்த விலைகள்.

(3) இந்தப் பிரிவின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அது ஒரு கூட்டத்தொடராகவோ, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு காலஅளவிற்கு அமர்வில் இருக்கையில் அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும் மேற்சொன்ன கூட்டத் தொடரை அல்லது

அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு அந்த விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட படிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.